## இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

# 25 மீனவர்களை விடுவித்திட உடனே நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, ஜூலை 3-

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 25 மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் - பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டியும் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 25 மீனவர்கள் பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா கடல்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நிலையில், நேற்று(01.07.2024) இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2-7-2024) கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், சமீப வாரங்களில் இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாகக் கவலைபடத் தெரிவித்துள்ளதோடு, IND-TN-10-MO-1379 மற்றும் IND- TN-09-MO-2327 என்ற பதிவெண்களைக் கொண்ட இரண்டு மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளிலும், இரண்டு பதிவு செய்யப்படாத மீன்பிடிப் படகுகளிலும் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 25 மீனவர்கள் 1-7-2024 அன்று இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1974 ஆம் ஆண்டிலிருந்தே, அப்போதைய ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை நிலவுவதாக ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் தனது 27-6-2024 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கோடிட்டுக் காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், தி.மு.க. தலைமையிலான மாநில அரசு கச்சத்தீவு ஒப்பந்தத்தை அப்போது முழுவீச்சில் எதிர்த்தது என்பதையும், தனது எதிர்ப்பை தமிழ்நாடு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, இது சம்பந்தமாக மாநில அரசுடன் முறையாக கலந்தாலோசிக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்திய மீனவர்களின் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் வகையிலும், அவற்றைப் பறிக்கும் வகையிலும் கச்சத் தீவை முழுமையாக இலங்கைக்கு விட்டுக் கொடுத்தது அப்போதைய ஒன்றிய அரசுதான் என்று தனது கடிதத்தில் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது தலைவரும், அப்போதைய தி.மு.க. தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் ஒரு பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்து, அதில் "ஒன்றிய அரசு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் அரசியலமைப்பிற்கு முரணானதாக இருக்கும்போது, கச்சத்தீவின் இறையாண்மை ஒரு தீர்க்கப்பட்ட விஷயம் என்று கூற முடியாது" என்று திட்டவட்டமாகக் கூறியிருந்ததை முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் நினைவு கூர்ந்துள்ளார். பா.ஜ.க. தலைமையிலான அரசு தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியில் இருந்தாலும், இந்தப் பிரச்னையை தேர்தல் நேர முழக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வருவதாகவும், கச்சத்தீவை மீட்க குறிப்பிடத்தக்க அர்த்தமுள்ள எந்த முயற்சியையும் அது எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது காலத்தின் கட்டாயமாகும் எனத் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை நிலைநாட்டும் வகையில், மீனவர்களுக்குத் தொடர்ந்து இடையூறு விளைவித்து வரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணத் தேவையான, உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும், அன்னியூர் சிவாவை ஆதரித்து காணை தெற்கு ஒன்றிய தேர்தல் பொறுப்பாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள காணை தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட வீரமூர் ஊராட்சியில் உள்ள மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு தேர்தல் பிரசரம் மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் லட்சுமணன், எம்.கே.மோகன், ஒன்றிய செயலாளர் கல்பட்டு ராஜா, பகுதி செயலாளர்கள் ந.இராமலிங்கம் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், ச.பரமசிவம், எஸ்.மதன்மோகன் மற்றும் வட்ட செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் மற்றும் கூட்டணிகட்சி நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

## சமஸ்கிருதத்தில் பெயரிடுவதை நாங்கள் முதலிலேயே எதிர்த்தோம்!

# நாடாளுமன்ற அமளியின் போது - குற்றவியல் சட்டங்களை நிறைவேற்றுவதா?

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, ஜூலை 3-

"நாடாளுமன்றத்தில் அமளி நடந்துகொண்டிருந்தபோது, குற்றவியல் சட்டங்களை நிறைவேற்றுவதா?" என கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள், "புதிய மூன்று குற்றவியல் சட்டங்கள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன் செயல்முறையும் தமிழில் நடைபெறும். தமிழ்நாடு முதலமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ இவற்றின் பெயர்களுக்கான அவர்களின் எதிர்ப்பு குறித்து கலந்தாலோசிக்க நேரம் கோரவில்லை. நான் அவர்களிடம் மீண்டும் கூறிக்கொள்கிறேன். உங்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால் என்னைச் சந்தியுங்கள். சட்டங்களைப் புறக்கணிப்பது சரியாகாது" என்று இச்சட்டங்கள் தொடர்பாகத் தமிழ்நாடு முதலமைச்சரின் ஆட்சேபணை தொடர்பாகக் கருத்து தெரிவித்திருப்பதாக,

தி இந்து' ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியாகியுள்ளது.

புதிய மூன்று குற்றவியல் சட்டங்களுக்கு சமஸ்கிருதத்தில் பெயரிடுவதற்கு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவில் நாங்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தோம்.

இச்சட்ட முன்வடிவுகள் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, நாடாளுமன்ற அவைக்குள் நடந்த அத்துமீறல் குறித்து எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

ஒன்றிய அரசுக்கு உண்மையாகவே ஜனநாயக உணர்வு இருக்குமானால், எதிர்க்கட்சியினர் அவையினில் இல்லாதபோது இந்தச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கக் கூடாது.

ஜனநாயகத்தைக் கடைபிடியுங்கள், போதிக்காதீர்கள்!

இவ்வாறு என்.ஆர். இளங்கோ, தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மோடி அரசு அவைக்குறிப்பிலிருந்து எவ்வளவு வேண்டுமோ நீக்கட்டும்!

# அவைக்குறிப்பிலிருந்து பேச்சை நீக்குவதால் உண்மை மாறிவிடாது!

## மக்களவைத் தலைவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடிதம்!

புதுடெல்லி, ஜூலை 3-

அவைக்குறிப்பிலிருந்து தனது பேச்சை நீக்குவதால் உண்மை மாறிவிடாது. மோடி அரசு எவ்வளவு விரும்புகிறதோ, அவை அனைத்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கட்டும். எவ்வளவு வேண்டுமோ நீக்குங்கள். உண்மையை உங்களால் மாற்ற முடியாது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

அவைக் குறிப்பிலிருந்து தனது உரையின் சில பகுதிகள் நீக்கப்பட்டதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். நீக்கப்பட்ட தனது உரையை அவைக் குறிப்பில் மீண்டும் சேர்க்க வேண்டும் என்று மக்களவை சபாநாயகருக்கு ராகுல் கடிதம் எழுதியுள்ளார்.

மக்களவையில் குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, ஒன்றிய பா.ஜ.க., அரசையும், பிரதமர் மோடியையும் கடுமையாக விமர்சித்தார். பல்வேறு குற்றச்சாட்டுகளையும் அவர் முன்வைத்தார்.

இதனால் பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர்களும், பா.ஜ.க., வினரும் கடும் அதிர்ச்சியடைந்தனர். ராகுல்காந்தியை பேச விடாமல் தடுக்க, பிரதமர், ஒன்றிய அமைச்சர்கள், பா.ஜ.க., எம்.பி.,க்கள் உள்ளிட்டோர் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தினர்.

இந்நிலையில், அவைக் குறிப்பிலிருந்து ராகுல் காந்தி உரையின் சில பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. இதற்கு ராகுல்காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல்காந்தி, அவைக்குறிப்பிலிருந்து தனது பேச்சை நீக்குவதால் உண்மை மாறிவிடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

மோடி அரசு எவ்வளவு விரும்புகிறதோ, அவை அனைத்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிக்கொள்ளட்டும் என்று அவர் சாடியுள்ளார். மோடியின் உலகத்தில் உண்மைக்கு இடமில்லை என்றும் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

இதற்கிடையே, நீக்கப்பட்ட தனது உரையை அவைக்குறிப்பில் மீண்டும் சேர்க்க வேண்டும் என்று மக்களவை சபாநாயகருக்கு எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், நாடாளுமன்றத்தில் தாம் ஆற்றிய உரையில் இருந்து 11 பகுதிகள் அவைக் குறிப்புகளில் இருந்து நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அவைக்குறிப்பிலிருந்து தனது பேச்சை நீக்குவதால் உண்மை மாறிவிடாது என்று அவர் தெரிவித்துள்ளார். தமது உரையின் முக்கியப் பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

## ஆதிதிராவிடர் - பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் சார்பில்

# சிறந்த எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புகளுக்கு ரூ.1 லட்சம் உதவித் தொகை!

## ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 3-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த இலக்கிய படைப்புகளில் 11 நபர்களது படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவர்களது படைப்பினை வெளியிட உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில், ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 9 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பிரச்சினைகளைப் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர் மற்றும் பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத எழுத்தாளர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுவர். இதனை ஊக்குவிக்கும் வண்ணம் இவர்களது சிறந்த இலக்கிய படைப்பினை வெளியிட தலா ரூ.1,00,000/-ஆக பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படவுள்ளது என ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

நிபந்தனைகள் வருமாறு:

எழுத்தாளர்களுக்கு வயது வரம்பு இல்லை.

கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவை எதுவாகவும் இருக்கலாம். இருப்பினும் தமிழ் மொழியிலேயே படைப்பு இருக்க வேண்டும். பிறமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த தமிழ் மொழி படைப்பாகவும் இருக்கலாம்.

எம்.பில்., பி.எச்.டி., போன்ற படிப்புகளுக்குத் தயாரிக்கப்படும் ஆராய்சிக் கட்டுரைகளுக்கு அவை அரிதான சிறப்புடையதாக இருக்க வேண்டும்.

படைப்புகள் 90 பக்கங்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

ஏற்கனவே சந்தையில் வெளியிடப்பட்டுள்ள படைப்புகளை கொண்டு விண்ணப்பித்தல் கூடாது.

ஒரு முறை விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட எழுத்தாளர் 5 ஆண்டுகளுக்கு பிறகே விண்ணப்பிக்க வேண்டும்.

படைப்புகளை தேர்ந்தெடுத்தல் குறித்து அரசால் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவின் முடிவே இறுதியானது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் இதற்கான விண்ணப்பங்களை தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களிலும், ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்திலும் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், tn.gov.in/forms என்ற இணைய தளத்திலும் (website) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிக்க கடைசி நாள்.31/07..2024. விண்ணப்பதாரர்கள் தங்களது படைப்பினை இரு நகல்களிலும் டிஜிட்டல் (Digital) முறையிலும், உரிய படிவத்தில் தவறாமல் கைபேசி எண்ணினை குறிப்பிட்டு உரிய காலத்திற்குள் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை-05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 8** ம.அ.8.ந.க.எண்.இ1/7658/A/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

மேற்பார்வை பொறியாளர் (ம) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி**
**மண்டலம் - 8, பகுதி - 23, வார்டு - 108, சுப்பராயன் தெருவில் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டிடம் கட்டும் பணி**

மொத்த பணியின் உத்தேச தொகை ரூ.100.96 லட்சம் முன்வைப்பு தொகை 1% ரூ.1,00,960/-

மேலும் விவரங்களுக்கு (https://www.tntenders.gov.in) மற்றும் https://www.chennaicorporation.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் 18.07.2024 அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் 19.07.2024 அன்று மாலை 3.30 மணி வரை

செ.ம.தொ.இ / 2167 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**மண்டல அலுவலர் / ம -8**


## சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

# 'நீட்' தேர்வை ரத்து செய்யக் கோரி, கழக மாணவர் அணி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழக மாணவர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுகோள்!

**மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் அறிவிப்பு!**

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றிய நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் சட்டமுன்வடிவிற்கு உடனடியாக ஒப்புதல் வழங்கிட ஒன்றிய அரசை வலியுறுத்தியும், கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடும், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனையின்படி, நீட் தேர்வினை நடத்தியே தீருவேன் என்ற சர்வாதிகாரப் போக்கினை கடைபிடிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்தும், நீட் தேர்வில் நடைபெற்றுள்ள மிகப் பெரிய மோசடிகளுக்கு மேல்நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இன்று நடைபெறும் 03.07.2024 - புதன் கிழமை காலை 09.00 மணியளவில், சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள், மாணவ/மாணவிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்/தலைவர்/துணைத் தலைவர் /துணை அமைப்பாளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

துபாய் **வி.ஆர்.விஜய்**

சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலை முன்னிட்டு, திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள விக்கிரவாண்டி மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட ஆசூர் ஊராட்சியில் பாகம் எண் 199 பகுதியில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வீடு வீடாகச் சென்று தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி மற்றும் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பூத் பொறுப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கர்நாடக மாநில கழகத்தினர்

# விக்கிரவாண்டியில் வாக்குச் சேகரிப்பு!

## மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில்

விழுப்புரம், ஜூலை 3 -

கருநாடக மாநில தி.மு.க. சார்பில் மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மு.இராஜசேகர், எம்.முருகானந்தம், முகமது ஆரிப் மற்றும் தினேஷ் யோகேந்திரா, து.பிரபு, சதீஷ், பிரசன்னா, ஜெ.தனுஷ் ஆகியோர் விக்கிரவாண்டி சட்டடமன்ற இடைத் தேர்தலில் வாக்குச் சேகரித்தனர்.

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் -ஜூலை 10.7.2024 தேதியில் நடைபெறும் இடைத் தேர்தலில் இந்திய கூட்டணியில் உச்சம் தொட்ட இமயம் திராவிட மாடல் அரசியல் ஒளிவிளக்கு 40 - 40 ம் வென்ற மக்கள் போற்றும் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அறிவித்துள்ள கழக வேட்பாளர் அன்னியூர் சிவா, வெற்றிக்காக தொகுதி வாக்காளர்கள் வீடு தோறும் அணுகி துண்டு அறிக்கை அளித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து கழக வேட்பாளர் வெற்றிக்கு ஆதரவு கேட்டு வாக்கு சேகரித்தனர்.



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள விக்ரவாண்டி மத்திய ஒன்றியம் பொன்னாங்குப்பம் ஊராட்சி பாகம் எண் 203–204 உட்பட பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்காக திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் வீடு வீடாக சென்று தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். உடன் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பூத் பொறுப்பாளர்கள், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.